Koviloor Digital Library
26551 24-3
359
2

ஓம்

பரப்ப்ரஹ்மணே நம:

ஸ்ரீ சங்கரபகவத் பாதாசார்ய ஸ்வாமிகள் சரித்திரம்.

சமிவன க்ஷேத்திரமென்னும்

ஸ்ரீ கோவிலூர் மடாதிபதி அவர்களது

பொருளுதவியைக்கொண்டு

காரைக்குடி

கம்பராமாயண ப்ரசாரகர்

மோ. வே. கோவிந்தராஜ ஐயங்காரால்

எழுதி வெளியிடப்பெற்றது.

வைசியமித்திரன் பிரஸ், பிராஞ்சு

காரைக்குடி.

1918.

இனாமாக அளிக்கப்படும்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஓம்.

பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ சங்கரபகவத் பாதாசார்ய ஸ்வாமிகள் சரித்திரம்.

சமிவன க்ஷேத்திரமென்னும்
ஸ்ரீ கோவிலூர் மடாதிபதி அவர்களது
பொருளுதவியைக்கொண்டு
காரைக்குடி
கம்பராமாயண ப்ரசாரகர்
மோ. வே. கோவிந்தராஜ ஐயங்காரால்
எழுதி வெளியிடப்பெற்றது.

வைசியமித்திரன் பிரஸ், பிராஞ்சு
காரைக்குடி.
1918.

இனாமாக அளிக்கப்படும்.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 2655

Koviloor Digital Library

Koviloor Digital Library

24-3

ஓம்.

பரப்ரஹ்மணேநம:

முகவுரை.

பொன்னென வுளத்துப் பொருந்திய சங்கரன்
தன்னிரு சரணம் தலைக்கணி யாமே

ஸ்ரீ கந்தபுராணம் சிவரஹஸ்ய கண்டம் நவாம்சம் பதினாறாவது அத்யாயத்துள்ளும் சிவபுராணத்துள்ளும் தேவர்களாற் கூறப்பட்டிருக்கிற ஸ்ரீமத் சங்கராசார்யஸ்வாமி சரித்திரம், வியாஸர் முதலிய முனிவர்களாலும், ஸ்வாமிகளது காலத்திலிருந்து அவர்களோடு உண்டு உடுத்து உலகியல் ஆன்மவியல் இரண்டிலும் அவர்களுடன் அனுபவத்திலிருந்துவந்த எம் ஆசிரிய பரம்பரைகளாலும் எழுதப்பெற்றிருந்த நூல்களின் ஆதாரங்கொண்டும், சித்விலாஸஸ்வாமி விஞ்ஞான ஸ்வாமியாதிய ஸந்யாஸிகள் எழுதிவைத்துள்ள சங்கர விஜயவிலாசம் என்னும் நூலின் துணைகொண்டும், வியாஸலீய மஹாகாவியத்தின் உதவிபெற்றும், பத்மபாதர் எழுதிய சரித்திரத்தின் உத்தமோபசாரங்கொண்டும் இச்சரித்திரம் எழுதப்பெற்றிருக்கிறது.

இதனுள் ஸ்வாமியின் சரித்திரம், யாவராலும் எளிதில் படித்தறிந்துகொள்ளும் பொருட்டு எளியதமிழ் நடையில் எழுதப்பெற்றிருக்கிறது.

இப் புத்தகத்தை, யாவரும் அதிசுலபமாகப் பெற்றுப் படித்து ஆசாரியர்களுடைய அத்புதங்களை யறிந்து கொண்ட மாத்திரையானே, அவர்களது மதக்கொள்கைகளாகிய அத்வைத மதக்கொள்கைகளிற் புகுந்து

Koviloor Digital Library

அப்யஸித்து ஸ்வாமிகளைப்போலவே லௌகிக வ்யவஹார புத்தியினின்றும் மனதைத் திருப்பித்துக்கநிவ்ருத்திபெற்று பரோபகார சிந்தையில் பழகி த்வேஷ புத்தியை அறவே யொழித்து பரம சுகப்ராப்திக்கு ஸாதனமான ஆத்மாநுபவிகளாக விளங்கவேண்டுமென்ற பெருங்கருணைகொண்டு, ஸ்ரீ கோவிலூர் மடாதிபதிகளாகிய ஸ்ரீ வீர. அண்ணாமலைஞானதேசிகரவர்கள் பொருளுதவிசெய்து எழுதி அச்சேற்றி வெளிப்படுத்தி உரியவர்க்கு இனமாக அளிக்கும்படி செய்த உதவிக்கு எளியேன் நன்றி செலுத்துகின்றனன்.

மோ. வே. கோவிந்தராஜன்.

Koviloor Digital Library

ஶ்ரீ:

ஶ்ரீ சங்கர பகவத் பாதாசார்ய ஸ்வாமி சரித்திரம்.

அவதாரிகை.

பிரபஞ்சத்தில் அடங்கியிருக்கும் ஜீவராசிகள் பிரகிருதி, புருஷன், பரன் என்னும் மூன்றின் சேர்க்கையினால் இயங்குகின்றன வென்பதும், புருஷனாகிய ஜீவன் பிரகிருதியின் தாழ்ந்த அம்சங்களைவிட்டுத் தனக்கு அநாதியாக வந்தேறியாயுள்ள அஞ்ஞானத்தினின்றும் நீங்கித் தனது ஸ்வரூப ஞானத்தை யடைகின்றானென்பதும், பிறகு மஹான்களாகிய ஆசாரியர்களுடைய உபதேசங்களால் பரத்தின் அதாவது ஈசுவரனுடைய ஸ்வரூபத்தையுணர்ந்து தனக்கும் ஈஸ்வரனுக்கும் உண்டாயிருக்கும் சம்பந்தமின்னதென்று தெளிந்து பின்னும் தன்னைப்பற்றியுள்ள பிரகிருதியின் உயர்ந்த அம்சங்களையும் உதறிவிட்டுத் தானும் ஈசுவரனும் ஒன்றாக நின்று ஆத்மாநுபவத்தைப் பெறுகின்றானென்பதும் வைதிகர்களுடைய ஸித்தாந்தம். அசேதனத்துடன் அதாவது பிரகிருதியம்சங்களுடன் சம்பந்தப்பட்டுள்ள சேதனன் அதாவது ஜீவன் தனது ஸ்வரூப ஞானத்தை யறிந்துவரும் யாத்திரைக்காலம் மிகவும்

Koviloor Digital Library

நீண்டுருக்கிறபடியால், இடையில் உண்டாகும் ஸங்கோச விகாஸங்களுக்கு ஏற்றபடி ஜீவன் பிறவியை அடைகின்றுனென்பதும், அவ்வக்காலங்களுக்கிடையே அவச்யம் ஏற்பட்டபோதெல்லாம் ஜீவனது விருத்தியம்சத்தை நாடியவராகவே ஒவ்வொரு காரியத்தின் நிமித்தம் ஈசுவரன் அவதரிக்கின்றுரென்பதும் வைதிக ஸித்தாந்தமே. இதனையே ஸ்ரீகீதையில் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா "தர்மத்துக்குத் தாழ்வும் அதர்மத்துக்கு வாழ்வும் உண்டாகும்போது நான் உருவெடுத்துத் துஷ்டர்களை விகூஷித்துச் சிஷ்டர்களைப்பரிபாலித்துத் தர்மத்தை வளர்க்கிறேன்" என்றும் அறிக்கையிட்டிருக்கிறுர்.

இவ்விதம் பகவான் உலகவிருத்தியின் பொருட்டு இடையிடையே அவ்வப்போது தோன்றி ஸ்வல்ப காலமிருந்து தமது உபதேசமூலமாகவோ, துஷ்டநிக்கிரஹ மூலமாகவோ சிஷ்டபரிபாலன மூலமாகவோ தாம் வந்த காரியத்தை முடித்துவிட்டு மறைவதும், அன்றித்தமது இச்சையினுல் பிறப்படைந்து மனிதனுடைய அவஸ்தைகளையுமுற்று யோகநிலையில் நின்று தம்மைத் தாமுணர்ந்து, தம்மிடத்துப் பரம்பொருளின் அம்சத்தைத் தெளிந்து, அதனைப் பிறருக்கும் அதிசய காரியங்களாற் காட்டி உலகில் ஸமதிருஷ்டியையும் காட்டி உபதேச மூலமாகவும் ஒழுக்கத்தின் மூலமாகவும் சிஷ்ட பரிபாலன துஷ்ட நிக்ரஹ தர்ம ஸ்தாபனங்களாகிய தாம் வந்த காரியத்தை முடித்துவிட்டு மறைவதும் அவதார விசேஷங்களென்று அறிவுடைப் பெரியோர் அறுதியிட்டிருக்கிறுர்கள்.

Koviloor Digital Library

ஒவ்வொரு அவதாரத்தின் சரித்திரத்தையும் எழுதப்புகும்போது, "அவர் அவதரிக்குமுன் உலகம் எந்தப் பக்குவத்தில் நின்றிருந்தது? அவர் ஏன் அவதரிக்க வேண்டும்? என்னும் இவைபோன்ற பல கேள்விகட்குத்தகுந்த ஸமாதானங்களைக் காட்டிக்கொண்டே போவது நலமாகும்.

பாமரர்களுக்கும் உண்மையைப் போதிக்கவந்த வேதம், அப்பாமரருடைய மனதைத் திருப்புவதற்காக வெண்ணி அற்பபோக ஸ்தானங்களாகிய ஸ்வர்க்காதியநுபவ ஸாதனங்களான யாகங்களை வகுத்துக்காட்டியும், அவர்கள் யாக பலனாகிய இந்திராதி போகங்களை விரும்பித் தமது பழைமையான துராப்பியாசங்களினின்றும் விலகிச் சிறிதேனும் புத்தி தெளிந்து வந்த பிறகு அந்த இந்திராதிபோகங்களும் நிலையற்றனவென்று காட்டியும், ஜீவாத்மஸ்வரூபத்தைச் சொல்லிப் பரனுக்கு பக்திசெய்வதே மார்க்கமெனக் கூட்டியும், அப்பரத்துடன் கூடினதே முக்தி என்று வற்புறுத்தியும் செல்லாநிற்கின்றது.

யாகமார்க்க விபரீதம்.

இதன் முடிந்தகருத்தை நன்கு அறிந்துகொள்ளாத காலத்து யாகம் செய்தல் மாத்திரமே உத்தம தர்மம் என்று கவனிக்கப்பட்டு ஜீவர்கள் அந்தக்கர்மம் ஒன்றையே முக்தி மார்க்கமெனக்கைக்கொண்டு ஒழுகிவந்ததால், வேறு எவ்விதமான நிவ்ருத்திமார்க்கத்திலும் மனதைப்

Koviloor Digital Library

பக்குவப்படுத்திக்கொள்ள முயலாமல், எவ்வகையினரும் யாகாதிக்ரதுக்களிலேயே த்ருப்தியடைந்து வந்தார்கள். உண்மையைத்தெரிந்துகொள்ளாத இந்தக்காரியத்தினுல் இவர்கட்கு ஒருவாறு த்ருப்திபோலத் தோன்றினும் இதர ஜீவர்கட்குப் பீடையும் அதனுல் உலகத்துக்கு அழிவும் தர்மமுன்னேற்றத்துக்குத் தடையும் ஏற்பட்டிருந்தபடியால், புத்தக்கடவுள் தோன்றி ஜீவகாருண்யம் ஒன்றையே தலைமையாகக்கொண்டு உபந்யாஸங்களைசெய்து, ஜீவர்களை "யாகங்களே மோக்ஷஸாதனம்,, என்றெண்ணிய ஒருதலையான எண்ணத்தினின்றும் விலக்கினர்.

பௌத்தமத விபரீதம்.

அவர் வாக்கினுற் சொன்னபடியாகவே எவ்விதத்திலும் ஜீவர்கட்கு ஹிம்ஸை செய்யாத அஹிம்ஸா மார்க்கமே பரமமான தர்மமென்று ஜீவர்கள் உணர்ந்துகொண்டு துக்கநிவ்ருத்தியை ஒருவாறு தேடிக்கொண்டார்களேனும், பெரும்பாலான ஜீவர்கள் அக்கடவுள் மௌனமாக இருந்து காட்டியபடி ஆத்மாநுபவத்திற் பழகிச் சுகப்ராப்தியை யடையக் கருதவே இல்லை, ஆகையால், அக்காலத்தில் எங்கும் காருண்ணியம் நிரம்பியிருந்ததே யொழியத் தெய்வவுண்மையில் நம்பிக்கை பரவிவரவில்லை. இப்படி ஆஸ்திக்ய புத்தி தடுக்கப்பட்டு யாககாரியங்களும் நிறுத்தப்பட்டுப் போய்விடவே வேதாத்யயனத்தில் அச்ரத்தையும் வேதியர்களிடத்தில் அப்ரியமும் தேவோபாஸனையில்

Koviloor Digital Library

அவநம்பிக்கையும் பரவப்பட்டுப் பெரும்பாலரும் தான்றோன்றித் தம்பிரான்களாகத் திரிந்தார்கள்.

அவதார சமயம்.

இத்தஸமயமே வேதக்கொள்கையையும் வேதியர் ஒழுக்கத்தையும் தெய்வவுண்மையையும் தெய்வோபாஸனையில் ச்ரத்தையையும் உலகத்துக்கு வெளிப்படுத்தவேண்டிய காலமாக இருந்தது. இதுவே வைதிக மார்க்கம். இம் மார்க்கத்தையே தக்க தத்வ ஆராய்ச்சியுடன் நமது ஆசாரியஸ்வாமிகள் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

வேதாந்தமத உண்மைகள்.

இம் மதத்தில் வேதாங்கங்கள் உபாங்கங்களுடன் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கின்றன; ஆகையினுல் வேதிய வொழுக்கமும் தேவோபாஸனையும் இவற்றுக்கு ஸாதனங்களான யாகங்களும் பூஜாகாரியங்களும் வ்ரதானுஷ்டானங்களும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இவற்றின பலப்ராப்திகளான இந்திராதி போகஸ்தானங்களும் தபாதியோக பலஸ்தானங்களும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. உலகம் அதுவரையில் உபாஸனுமார்க்கத்தில் அநுசரித்துப் பழகிவந்தபடிகளான வைதிகமதங்களாகிய ஷண்மதங்களும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனுல் இவைகளெல்லாம் வ்யவஹார மார்க்கங்களென்றும் இவற்றினுல் ஆத்மாவுக்கு ஒருவாறு துக்கநிவ்ருத்தியிலும் மனஸ்ஸமாதானத்திலும்

Koviloor Digital Library

ஜீவகாருண்யத்திலும் அப்யாஸம் தோன்றலாமேயன்றி சுகப்ராப்திக்கு வேண்டிய ஸாதனங்கள் ஏற்பட மார்க்கமில்லையென்றும், சுகராப்திக்குப் பரம சாதனமான மார்க்கமே பாரமார்த்திக மார்க்கமென்றும், இது பரமார்த்த புத்தியால் தோன்றுவதொன்றென்றும், இந்தப் பரமார்த்த புத்தியானது ஸ்வரூபவிசாரணையொன்றினுலேயே பிறக்குமென்றும், இதற்கு உபநிஷண்மார்க்கமாகிய வேதாந்த விசாரமே பரமமான ஸாதனமென்றும், ஆத்மைக்யமே அநுபவஞானமென்றும், பேதநிவ்ருத்தியும் த்வேஷ நிவ்ருத்தியுமே ஸாத்தியமான பலமென்றும், இப்படி இரண்டற்ற பாவந்தோன்றுதலாலே இம்மார்க்கம் அத்வைதமார்க்கமென்றும் நன்ருகப் பலதிறப்பட்ட நியாயங்களைக்கொண்டு விசாரித்து சுருதி யுக்தி யனுபவ வாயிலாக நிர்ணயிக்கப் பெற்றிருக்கின்றன.

அவதாரம்.

இவர் அவதரித்த கிராமம் காலடி என்னும் பெயருடையது. இது, கொச்சி ஷோரனூர் இருப்புப் பாதையில் ஒரு ஸ்டேஷனுகிய ஆள்வாய் என்னும் ஊருக்கு ஆறுமயில் கிழக்கேயிருக்கிறது. இந்தக் கிராமத்துக்கு இப்பெயர் உண்டானதற்குக் காரணமாக ஒரு கதையும் சொல்லப்படுவதுண்டு.

சேரளராஜனுகிய ராஜசேகரனென்பவன் தனது இராஜதானிக்குச் சமீபத்தில் ஒரு ஸ்வயம்புலிங்க

Koviloor Digital Library

மிருப்பதாகக் கனவுகண்டு அதனைப்போய்ப்பார்த்து அதற்காக அங்கொரு கோவில் கட்டுவித்து, அதன் பூஜைசெய்யும் பிராமணர்களுக்கென்று ஒரு அக்ரஹாரமும் ஏற்படுத்தினான். ஈச்வரனது காலினடியில் ஏற்படுத்தப்பட்ட ஊராதலின் அதற்கு அப்பெயர் வந்ததென்று சொல்வர்.

அந்த அக்ரஹாரத்தில் கிருஹஸ்தாச்ரமத்தை நிலை தவறாமல் நடத்திவந்த சிவகுரு என்னும் அந்தணருக்குச் சிவபெருமானம்சமாக அவதரித்தவர் நமதுஸ்வாமி. இவர் கலியுகத்து மூவாயிரத்து ஐம்பத்தெட்டாவதாண்டுக்குச் சரியான விக்ரமசகம் பதினான்காவதாகிய ஈசுவரவருஷம் வைசாக மாதத்துள் பஞ்சாங்கசுத்தமுள்ள நல்லநாளில் நல்லவோரை நறகோள் அமைதிகளும் கூடிய காலத்தில் சிவகுருவின் மனைவியாரான ஆரியாம்பை வயிற்றில், அநசூயை வயிற்றில் துர்வாசரைப்போலவும் அதிதி வயிற்றில் வாமனரைப்போலவும், அவதரித்தார். இப்படி அவதரித்த இம்மகானின் மூன்றாவது வயதில் பிதாவான சிவகுரு மண்ணுலகைவிட்டு நீங்க, இக்குமாரர் தமது தாயைத் தமது தெய்வமாகப் பாவித்து, ஐந்தாவது வயதில் உபநயனம் செய்யப்பெற்று, விதிப்படி வேதாத்யயனம் செய்து, தாம் ஏற்றுக்கொண்ட ஆச்சிரமத்துக்கு ஏற்பப்பிக்ஷாடன வ்ரதத்தைக் கைக்கொண்டு இருந்தார். இவரது திவ்யவடிவினையும் வாக்கு சுத்தத்தையும் வேதமந்திர உச்சாரணத்தின் அழகையும் நடத்தையின் க்ரமத்தையும் ஊராரெல்லாரும் வியந்திருந்ததால், இவரது பிக்ஷாடன காலத்

Koviloor Digital Library

மிகவும் கௌரவமாகவே நடந்தது. ஒருகால் இம்மஹான் தமது க்ருஹத்துக்குவர, தமது க்ருஹத்தில் இவருக்கு இடும்படியாக யாதொன்றுமில்லையே யென்று மயங்கின ஸ்திரீகள் தமக்ககப்பட்டதோர் நெல்லிக்கனியை இவருக்கிட்டு நிற்க, அதனைக்குறிப்பாலுணர்ந்தநமது ஸ்வாமி மகிழ்ந்து, கனகதாரை என்னும் ஸ்தோத்ரத்தினுல் லக்ஷ்மியை வேண்ட, அந்த க்ருஹத்திலுள்ளார் ஆச்சரியப்படும்படி அவ்வீடு முழுவதும் பொன் நெல்லிக்கனி நிறைய விழுந்தன. இப்படித் தமது இளமையிலேயே அதிக அற்புதங்களைக் காட்டி சகல வித்தையையும் ஐயம் திரிபு அறக்கற்றுணர்ந்ததைக்கண்ட தாயும் பந்துக்களும் இவருக்கு விவாகம் செய்ய உத்தேசித்திருந்தனர். பலபேரும் பெண் கொடுப்பதாக முன்னுக்கு வந்தார்கள். ஒருநாள் அகஸ்திய முனிவர் இவரது தாயிடம் வந்து இவருக்கு வாழ்நாள் சிறிதேதான் என்று சொல்லிப்போயினர். இம்மஹானும் தமக்கு ஸந்யாஸாச்ரமம் கொள்ள பிரியம் இருப்பதாகத் தெரிவித்தார்.

இதனைக்கேட்ட தாயார் மனம் வருந்தியிருக்க, இவர் எப்படியாயினும் மாதாவின்து உத்தரவின்மேல் தமது காரியத்தை முடித்துக்கொள்ள உத்தேசித்திருந்தார். எற்ப ஓர் நாள் சூர்ணிப்புழை என்னும் நதியில் ஸ்நானஞ் செய்துகொண்டிருந்தபொழுது, இவரது காலை ஒரு முதலை கவ்விக்கொண்டது. இதனைத் தெரிந்த தாயார் மற்றும் வருந்த, ஸ்வாமி தமது தாயைப் பார்த்து, 'ஸந்யாஸாச்ரமத்துக்கு உத்தரவு கொடுத்தால்

Koviloor Digital Library

இம் முதலைஎம்மை விட்டுவிடும்". என்று சொன்னார். அங்ஙனமே தாயும் உத்தரம் கொடுக்க அம்முதலையும் இவரது மகிமை தெரிந்து புகழ்ந்துவிட்டுப் போயிற்று. உடனே ஆச்ரமஸ்வீகாரம் செய்துகொண்டு, தமது தாயார் நினைத்தபோது வருவதாக வாக்குக்கொடுத்துப் புறப்பட்டுவிட்டார்.

இப்படி வெளிப்புறப்பட்ட நமது ஸ்வாமி தமக்கொரு ஆத்ம குருவைத்தேடிப் பலதேச யாத்திரை செய்து கடைசியில் பதரிக்குச்சென்று, அங்கே *பதரீ நாராயணன் சமீபத்துள்ள ஒரு ஆச்ரமத்தில் இருந்த **கோவிந்தஸ்வாமி** என்னும் ஆசாரியரைக் கிட்டி, அவருடைய தேஜஸினாலும் மகிமையாலும் அவரே தமது குருவெனத் தெளிந்து, **தசச்லோகி** என்னும் சித்தாந்த பிந்துவாகிய நிர்வாண தசகத்தால் பிரார்த்திக்க, அந்த ஆசாரியரும் அதன் அர்த்தகர்ப்பத்தைக்கவனித்து இவரது பக்குவத்துக்கு மெச்சி, தாமிருந்த சிறு குகையின் துவாரத்தின் மார்க்கமாகத்தமது சரணங்களைக் காண்பித்தார். உடனே நமது சங்கரரும் அப்பாதங்களைப் பூஜிக்க, கோவிந்தபாதரும் இவருக்கு ப்ரஹ்மோபதேசம் செய்தருளினார். அங்கே அப்பெரியவராலேயே க்ரமஸந்யாசத்தையும் பெற்றுக்கொண்டு, வேதவ்யாஸர் செய்த ப்ரஹ்மஸூத்ரத்துக்குப் பாஷ்யம் செய்யும்படி கட்டளையிட்ட அவரது இஷ்டத்துக்கு இணங்கி, அவரிடம் விடைபெற்றுக் காசிமாபுரிக்குப் போனார்.

அங்கே கங்கைக்கரையில், பல ஸந்யாசிகளுக்கு,

Koviloor Digital Library

ஆத்ம வித்தையைப் போதித்துக்கொண்டிருந்தார். அச் சமயத்தில் காவேரி தீரத்திலிருந்து, தகுந்த ஆசாரியனைத் தேடிவந்த ஸநந்தனன் என்னும் பிராமணர், நமது பகவத்பாதரை வந்து ஆச்ரயித்தார். நமது ஸ்வாமியும் வந்தவரிடம் சிஷ்யனுக்கேற்ற குணமிருக்க மகிழ்ந்து, அவருக்கு உபதேசம் செய்து தம்முடைய சிஷ்யருக்குள் அவரிடத்தில் அதிகப்ரியத்தையும் காட்டி வந்தார். இதனைக்கண்டு பொருத மற்ற சிஷ்யர்களுடைய சந்தேகத்தை நிவர்த்திப்பதன்பொருட்டு, அந்தத் தென் தேசத்துச் சிஷ்யர் கங்கைக்கு அக்கரையில் நின்றிருந்த போது, இக்கரையில் தாமிருந்துகொண்டு, உடனே வரும்படி ஆக்ஞாபித்தார். உடனே, அந்த ஸநந்தனரும் யாதொரு ஆலோசனையுமின்றித் தமது ஆசாரியருடைய பாதமலர்களை மனதில் தியானித்தவராகவே கங்கையில் இறங்கினர். இவர் இறங்கினவுடன் இவரது ஒரு அடிக்கு ஒரு தாமரை தோன்றி இவர் பாதத்தைத் தாங்க, இவரும் கரையேறினர். மற்ற சிஷ்யர்கள் வியந்து தமது சர்வம் ஒழிந்தனர். அதற்கேற்ப இவருக்குப் பத்மபாதரென்னும் நாமத்தையும் நமது ஸ்வாமி தந்தருளினார்.

ஒருநாள், நமது மஹான் அந்தக்காசீ க்ஷேத்திரத்தின் தெருவில் போய்க்கொண்டிருந்தபோது, ஒரு சண்டாளன் நான்கு நாய்களுடன் எதிரே வரக்கண்ட சிஷ்யர்கள், அவனை விலகிப்போகும்படித் தூண்டினார்கள். அப்போது அவன், ஸ்வாமியைப் பார்த்து, "ஆத்மஸ்வரூபத்தையறிந்த உமக்கு ஜாதிபேதம் எப்படித் தோன்

Koviloor Digital Library

றும்? ஆத்மாவில் ஜாதிபேதம் உண்டோ? கங்கா ஜலத்தில் தோன்றும் சூரியனுக்கும் குடத்துக்குள்ளில் தோன்றும் சூரியனுக்கும் பேதமுண்டா? தங்கப் பாத்திரத்தின் உள்ளிருக்கும் ஆகாசத்திற்கும் மண்பாத்திரத்தின் ஆகாசத்திற்கும் வித்யாஸம் எது?'' என்று கேட்டான்.

இதனைக்கேட்டதும் நமது ஆசாரியர் மகிழ்ந்து மனீஷா பஞ்சகம் என்னும் ஐந்து ச்லோகங்களால் தமது மனத்திலுள்ள போதவான அபிப்பிராயத்தை வெளியிட்டார். அவரது ஸ்தோத்ரம் முடிந்த பிறகு பார்க்க, அச்சண்டாளனும் நாய்களும் இல்லாமற் போக யாவரும் வியந்தார்கள். உடனே காசீநாதனான விச்வேசரும் ப்ரத்யக்ஷமாகி, தாமே சண்டாளனுருக்கொண்ட விதத்தையும், அவரது மனீஷா பஞ்சகத்தால் மகிழ்ந்ததையுஞ் சொல்லி, ப்ரஹ்மஸூத்ரத்துக்குப் பாஷ்யம் செய்யும்படி அனுக்கிரகம் செய்து மறைந்தருளினார்.

ஸ்வாமியும், ஸஹஸ்ரநாமபாஷ்யம் உபநிஷத்பாஷ்யம் கீதாபாஷ்யம் ப்ரஹ்மஸூத்ர பாஷ்யம் முதலியவற்றைச் செய்தருளினர்.

இந்த பாஷ்யங்களைத் தமது சிஷ்யர்களுக்கு உபதேசித்துக்கொண்டிருக்கும்போது அவ்விடத்தில் கிழப்பிராமணவுருவத்தோடு வந்த வியாஸர் கேட்ட கேள்விக்குத தக்க விடைகள் நமது ஸ்வாமி அளித்ததனால், யாவரும் மகிழ்ந்து அநுக்கிரகம் செய்து சென்றனர்.

Koviloor Digital Library

பிறகு சங்கரர், அங்கிருந்து சிஷ்யர்களோடு புறப்பட்டு, இப்போது அலகபாத் என்று அழைக்கப்படுகிற பிரயாகை என்னும் க்ஷேத்திரத்துக்கு போய்ச் சேர்ந்தார். இங்குதான் இப்பரத கண்டத்தின் ஏழு மஹா நதிகளுள் கங்கை யமுனை ஸரஸ்வதி என்னும் மூன்று நதிகளும் கூடிக் குலாவுகின்றன. ஸ்வாமி இந்தக் கூடல் துறையில் ஸ்நானம் செய்துவிட்டு, அங்கே யமுனா நதிக்கரையிலேயே ஒரு தமாலமரத்தினடியில் வீற்றிருந்து ஆத்மோபதேசம் செய்துகொண்டிருந்தார்.

இந்தச் சமயத்தில் ஸ்வாமி காதுக்கு ஒரு விஷயம் எட்டிற்று; என்னவெனில்:— அவ்வூரில் "குமரிலபட்டர் என்னும் ஒரு கர்மயோகியானவர், தமது பாவங்கள் கழியும் வண்ணம் அக்நிப்ரவேசம் செய்யப் போகிறார்" என்ற விஷயமே. இவரையே பட்டபாதர் என்று உலகம் சொல்லும். இதனைக் கேட்டவுடன், சங்கரபகவத்பாதர் சிஷ்யர்களோடு அங்கே சென்று குமரிலபட்டருக்குத் தர்சனம் கொடுத்தார். அந்த குமரிலப்பட்டரும், சுப்ரஹ்மண்யாவதாரராக வந்து உலகத்துக்குக் கர்மமார்க்கத்தைப் போதித்தவர். இவரும் தமது ஸ்வரூபத்தையும், ஸ்ரீ சங்கரபகவத்பாதருடைய ஸ்வரூபத்தையும் ஆத்மஞானத்தால் தெரிந்துகொண்டவராதலால், ஸ்ரீமத் சங்கரரோடு சிலகாலம் சல்லாபம் செய்து, கடைசியாக நமது ஸ்வாமியைப் பார்த்து, "மாஹிஷ்மதி என்னும் பட்டணத்தில் நான் முகனது அவதாரராக மண்டனமிச்ரர் என்னும் ஒரு பிராமணர் ஸரஸ்வதியின் அம்சத்தால் அவதரித்துள்ள

Koviloor Digital Library

ஸரஸவாணி என்னும் தமது தர்ம பத்நியோடு இல்லறத்தை இனிது நடத்தி உலகத்துக்கு க்ருஹஸ்த தர்மத்தின் மேன்மையைப் போதித்துக்கொண்டிருக்கிறார்; அங்கும் தாங்கள் செல்லவேண்டும்'' என்று பிரார்த்தித்துவிட்டு அவருடைய அநுக்கிரகத்தின்மேல் தமது கார்யத்தை முடித்துக்கொண்டே இம்மண்ணுலகை விட்டனர்.

உடனே பகவத்பாதரும் அந்தப் பிரயாகையினின்றும் புறப்பட்டு மாஹிஷ்மதிக்குச் சென்றனர்.

நர்மதை யென்னும் நதத்தின் கரையில் உள்ள மாஹிஷ்மதி என்னும் பட்டணத்தில், மண்டனமிச்ரர் தமது தர்ம பத்நியோடு, இல்லறம் நடத்திவருநாளில் ஒருநாள், தமது க்ருஹத்தில் நடத்தும் பித்ருதினம் வந்துசேர்ந்தது. அத்தினத்தில் வேதக்ரமப்படி சிராத்தம் செய்துமுடித்தற்பொருட்டு பூர்வமீமாம்ஸையைச் செய்தவராகிய ஜைமினி மஹரிஷியையும் உத்தரமீமாம்ஸையின் கர்த்தாவாகிய வேதவ்யாஸரையும் விச்வே தேவராகவும் பித்ருதேவராகவும் வரித்து மிகுந்த ச்ரத்தையுடன் அந்தத் தினத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளோடு இருந்தார். இந்த உலகத்துக்கு அலங்காரமாகப் பிறந்தவராதலால், இவருக்கு மண்டனமிச்ரர் என்னும் நாமம் வந்தது. மண்டனம் என்றால் அலங்காரம். அப்போது நாழிகை 18 இருக்கும். நமது ஸ்வாமி தமது சிஷ்யர்களோடு அங்குச் சென்றனர். அச்சமயம் வெளிக்கதவு தாளிடப்பட்டிருந்ததால், ஸ்வாமி தமது

Koviloor Digital Library

சீடர்களை வெளியில் நிறுத்திவிட்டு, தாம் மாத்திரம் தமது யோகபலத்தைக்கொண்டு ஆகாய வழியாக உள்ளே சென்றார்.

ச்ராத்த காலத்தில் சந்நியாசிகளைக் கண்டால் அந்த ச்ராத்தம் நஷ்டமாகுமென்று கர்மகாண்டத்தில் சொல்லியிருப்பதால் மண்டனர் நமது சங்கரரைக் கண்டவுடன் மிகுந்த கோபங்கொண்டார். அங்கிருந்த ஜைமினியும் வ்யாஸரும் வந்தவர் இன்னாரெனத் தெரிந்தவர்களாகையால், அவரது கோபத்தைத் தணித்து அவரையே விஷ்ணுவாக வரிக்கும்படி வேண்டிக்கொண்டார்கள். மண்டனரும் உடனே சாந்தராகி, அப்படியே நமது சங்கரரை விஷ்ணு ஸ்தானத்தை அங்கீகரிக்கும்படி பிரார்த்திக்க, பகவத்பாதர் தமக்கு நிமந்த்ரணபிக்ஷை வேண்டாமென்றும் வாதபிக்ஷைதான் வேண்டுமென்றும் சொன்னார். உடனே மண்டனரும் ஒத்துக்கொள்ள வாதம் நடக்கலாயிற்று.

இந்தவாதத்துக்கு மத்யஸ்தர்களாக இரண்டு ரிஷிகளையும் வரிக்க, அவர்கள் ஒத்துக் கொள்ளாமல், மண்டனரது தர்ம பத்நியாகிய ஸரஸவாணியையே மத்யஸ்தையாக வரித்துக்கொள்ளும்படி ஆஞ்ஞாபிக்க, ஆஞ்ஞாபித்தபடியே வகித்துக்கொண்டு, மறுநாள் வாதம் தொடங்குவதாகத் தீர்மானித்து, ச்ராத்தத்தை முடித்துவிட்டு, ரிஷிகள் இருவரையும் அனுப்பிவிட்டார்கள்.

வாதத்தில் மண்டனமிச்ரர் தோற்றுப்போக, அவரும் நமதுஸ்வாமியை வணங்கித்தமக்கு க்ரமஸந்

Koviloor Digital Library

டாஸம் தரும்படிக் கேட்டுக்கொண்டார்.

பிறகு, ஸரஸவாணியாகிய ஸாஸ்வதீதேவி, தான் ப்ரஹ்மலோகத்துக்குப் புறப்படவே, நமது ஸ்வாமி அவளையும் வாதுக்கழைத்து இருவரும் 17 நாள்கள் வாதம் செய்ய, வாணி ஒவ்வொன்றிலும் தோல்வி யடைந்து வருந்திப் பதினெட்டாம்நாள் ச்ருங்கார சாஸ்திரத்தின் வாதத்தையாரம்பித்தனள். அப்போது ஸ்வாமி, அவளிடம் ஒருமாதத்தவணை கேட்டுக் கொண்டு புறப்பட்டுக் காமசாஸ்திரத்தை அப்யஸிக்கச் சென்றார்.

ஒரு ஊரில் அமருகன் என்னும் அரசன் இறந்து போக, அந்தப் பிரேதத்தைக் கிடத்திக்கொண்டு அவனது பத்தினிகளும் மற்றுமுள்ள மந்திரிகளும் வருத்தப் பட்டிருப்பதைத் தெரிந்து கொண்ட ஸ்வாமி, தமது சிஷ்யர்களிடத்தில் தமது தேஹத்தை ஒப்பித்துவிட்டுப் பரகாயப்பிரவேசம் என்னும் வித்தையினால், அந்த ம்ருதமான சரீரத்தில் நுழைந்தார். உடனே அமருகன் தூங்கி விழித்தவன்போலெழுந்திருந்தான். சில நாளில், இவரது நூதனமான ஒழுக்கங்களால் ஸ்திரீகட்கும் மந்திரிகட்கும் ஸந்தேகமுண்டாகி, இவரை யாரோ ஒரு மஹானெனத் தெளிந்து, இவரது தேகத்தைக் கண்டுபிடித்துச் சுட்டெரித்துவிடும்படிக் கட்டளையிட்டார்கள். அந்தப்படியே சேவகர்களும் பலவிடங்களிற் றேடிக்கடைசியாக அதனைக் கண்டுபிடித்துக்கொண்டார்கள். அதனைத் தெரிந்துகொண்டு பத்மபாதர் முதலிய சிஷ்யர்கள், தங்கள் சாமர்த்தியத்தினாலும், மோஹமுத்

Koviloor Digital Library

கர மென்னும் பெயருடன் பஜகோவிந்தம் என்று குரு அருளிச்செய்த சுலோகங்களாலும் தங்களது அபிப்பிராயத்தை அமருகனாக இருக்கும் குருவுக்குத் தெரிவிக்க, நமது பகவத்பாதரும் மயக்கந் தெளிந்து அந்தத் தேகத்தைக் கீழே தள்ளிவிட்டுத் தமது தேகத்தில் நுழைந்தார்.

அப்போது அந்தச் தேகம் அந்தக் சேவகர்களால் பாதி சுடப்பட்டிருந்தது. அந்தச்சமயம் நமது ஸ்வாமி லக்ஷ்மீ நாஸிம்ம ஸ்தோத்ரம் செய்து, அவரது க்ருபையால் தமது தேசம் வளரப்பெற்று, சிஷ்யர்களோடு மாஹிஷ்மதி வந்து, ஸரஸவாணியோடு வாதஞ்செய்து அவளையும் ஜயித்து, அவளையும் ப்ரஹ்மலோகத்துக்குச் செல்ல அனுமதி கொடுத்து, மண்டனமிச்ரருக்கு க்ரம ஸந்யாசமும் ஸுரேச்வராசாரியார் என்னும் நாமமும் மளித்துத் தம்முடன் இருத்திக்கொண்டார்.

ஒருகால் மஹாராஷ்டிர தேசத்தில் ஒரு காபாலிக மதத்தான், ஸ்வாமி தனியே இருக்கும் போதுவந்து, அவரது சிரசைத் தமது கடவுளுக்கு அர்ப்பணமாகத் தந்தருளும்படி வேண்ட, ஸ்வாமியும யாதொரு தடையுமில்லாமல் தமது நிர்விகல்பஸமாதியின்போது வந்து எடுத்துப் போகும்படி அநுக்ரஹித்தார். அவ்வண்ணமே ஒருதினம் அந்தச்சமயம் பார்த்து அந்தக் காபாலிகன் வந்து சிரசை அபகரிக்க நின்ற தருணத்தில், பத்மபாதர் திடீரென அவ்விடத்துத் தோன்றி, விஷயம் தெரிந்து திகைத்து, லக்ஷ்மிந ஸிம்மனைத் துதிக்க

Koviloor Digital Library

அவர் உக்ரமான கர்ஜனையோடுதோன்றி, அந்தக்காபாலி கனைக்குத்திக் கொன்றருளினார். இந்த விஷயம் சிஷ்யருக்கும் மற்றவருக்கும் தெரியவர யாவரும் வியந்தார்கள்.

திருக்கோகர்ண மென்னும் திவ்விய ஸ்தலத்திக்குப் போனபோது அங்கு இறந்து கிடந்த ஒரு குமாரனைப் பிழைப்பித்துக் கொடுத்தருளினர்.

பிறகு ஸ்ரீபலி என்னும் கிராமத்தில் இருந்த பிரபாகரர் என்னும் க்ருகஸ்தர், தமது குழந்தை வயது எட்டாகியும் பேசுவது முதலிய செய்யாமல் ஸதா தியானத்தில் இருப்பவன் போலவும் உன்மத்தன் போலவும் இருப்பதை நிவர்த்திக்கவேண்டுமென்று பிரார்த்திக்க, ஸ்வாமி தமது த்ருஷ்டியாலும் வசனங்களாலும் அவனது உன்மத்தம் நீக்கிப் பேசும்படிச்செய்வித்தார். அக்குழந்தையும் தனது வாய்திறந்து அதிக வேகத்தோடு ஸமஸ்கிருத பாஷையில் தத்வமஸி வாக்கியத்திற்குப் பொருளாகப் பன்னிரண்டு சுலோகங்களை வருவித்தான். அதன் பொருள் யாவருக்கும் உள்ளங்கை நெல்லிக்கனியாக இருந்தமையால், அவருக்கு ஸ்வாமி ஹஸ்தாமலகர் என்னும் நாமம் கொடுத்துத் தம்மிடமே இருத்திக்கொண்டார். ஹஸ்தம் என்றால் கை, அமலகம் என்றால் நெல்லிக்கனி. பிரபாகரர் தமது மகன் பேசினானாலும், அத்வைத நிலைக்கு உரியனானபடியால், தமக்குப் பயனில்லையென்று போய்விட்டார்.

Koviloor Digital Library

பிறகு, நமது மஹான் தமது சிஷ்யர்களோடு, துங்கபத்திரைநதியில் பரிசுத்தமுடைய ச்ருங்ககிரிக்குப் போய்ச் சேர்ந்தார். அந்நகிரியில்தான் ஸ்ரீ ராமாயணத்தில் சொல்லப்படுகிற விபாண்டகரான கலைக்கோட்டு மஹாமுனியென்று பெயருடைய ரிச்யசிருங்கர் என்னும் ரிஷி தபசுசெய்துகொண்டிருந்தார். அங்கே போய்ச் சேர்ந்தவுடன், ஸ்வாமி அதன் பரிசுத்தத்தை யுணர்ந்து தமது சிஷ்யர்களோடு ஆலோசித்து அந்த இடத்தில் ஸாரஸ்வதியைப் பிரதிஷ்டைசெய்து பெரிய மதில்களோடு கூடிய மடமும் நிர்ணயம் செய்து கீழே ஸ்ரீ சக்கரமும் பிரதிஷ்டை செய்தார். இதற்குத்தான் சிருங்ககிரி மட மென்று பேர். இது சங்கர மடங்களுக்குள் முதன்மை பெற்றது. இங்கே தமது சிஷ்யரான ஸுரேச்வராசாரியரை இருக்கும்படி ஏற்படுத்தினர்.

பிறகு ஸ்வாமி சேது யாத்திரை போயிருக்கும் போது தமது மாதாவின் நினைவால் அவளது அந்திய காலத்தை யுணர்ந்து யோக சக்தியால் காலடிக்குப் போய்ச் சேர்ந்தார். அங்கே தாயாருக்குத் தரிசனம் கொடுத்து அவளது ப்ரார்த்தனையின்படி விஷ்ணுவை ஸ்தோத்திரம் செய்து அவரது சேவை செய்துவைத்துத் தாயாரை வைகுண்டத்துக்கு அனுப்பினர். பிறகு அவளது உத்தரகிரியைக்கு உதவியாக அங்குள்ள பிராமணர்களை வேண்ட, அவர்கள் ஸந்நியாஸிக்கு இதுஉரிய தல்லதாகையால் அவருக்குத் தாங்கள் உதவி செய்ய மாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். உடனே ஸ்வாமி கோபித்து அந்த உடலைச்சேதித்துக் கொல்லைப்

Koviloor Digital Library

புறத்தில் தகனக்ரியையும் முடித்துச் சென்றார். அந்தக் கோபத்தின் பலனாகவே இன்றும் மலையாளத்துப் பிராமணர்கள், தங்கள் வீட்டுக் கொல்லைப்புறத்தையே நன்காடாகக்கொண்டு, இறந்த தேகத்தைச் சேதிக்கும் வழக்கத்தையும் கொண்டிருக்கிறார்கள்.

பிறகு, ஸ்வாமி திக்விஜயம் செய்யப் புறப்பட்டுக் காஞ்சீபுரத்தில் ஒரு மடமும் ஜகன்னாதத்தில் ஒரு மடமும் துவாரகையில் ஒரு மடமும் பதரிகாச்ரமத்தில் ஒரு மடமும் ஸ்தாபித்தாகள்.

பிறகு காஷ்மீரத்துக்குப்போய் அங்குள்ள சாரதா பீடத்தின் தெற்குவாசலைத் தமது மகிமையால் திறந்து, அங்குள்ள பண்டிதாகளோடு வாதித்துத தமது வைதிக மதத்தை ஸ்தாபித்துவிட்டுத் தமது ச்ருங்ககிரிக்கு வந்து சிலகாலம் உபதேசகராக இருந்துவிட்டு 32 வது வயதில் இம்மண்ணுலகில் தமது புகழையும் மதத்தையும் மடங்களையும் சிஷ்யர்களையும் நிறுத்திவிட்டுத் தமது இருப்பிடமாகிய கைலையங்கிரிக்கு எழுந்தருளினார்.

Koviloor Digital Library

Printed at the Visiamitran Press Branch,
Karaikudi.

KOVILOOR ANDAVAR
A. No. 26551
LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஸ்ரீ:

குசேலர்.

ஐந்தங்கமுள்ள அரிய நாடகம்.

இந்த சரித்திரம் பாகவதத்திலுள்ள ஒரு உபாக்யானம். தமிழ் வித்வான் தேவராஜ பிள்ளையால் இயற்றப்பட்டுள்ள "குசேலோபாக்யானம்" என்னும் அருமையான நூலை முதனூலாகக்கொண்டு செவ்விய தமிழில் நாடகமாகச் செய்யப்பட்டிருக்கிறது. உயர்ந்த ஆண்டிக்பேப்பரில் 200 பக்கங்கள்கொண்ட ஒரு புஸ்தகம். புராதன சரித்திரத்தை நவீன கொள்கைக்கு இணங்க நாடகமாக எழுதப்பட்டுள்ளது. ஆண்பாலர்க்கும் பெண்பாலர்க்கும் உரிய அரிய தர்மங்களை விளக்குவது. இஃது ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கவேண்டியது அவச்யம்.

இதன் விலை ரூ 1—0—0

M. V. கோவிந்தராஜய்யங்கார்.

கம்பராமாயணப்ரசாரகர்,

காரைக்குடி,

(இராமநாதபுரம் ஜில்லா.)